*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

---

**No. LGS/PRO/2021** **25 ஜனவரி 2023**

# குடியரசு தின வாழ்த்துச் செய்தி

புதுச்சேரி வாழ் மக்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த குடியரசு தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நன்னாளில் பெருமைக்குரிய இந்திய ஜனநாயகத்தை உருவாக்கிக் கொடுத்த நமது தேசியத் தலைவர்களின் மாண்புகளையும் கோட்பாடுகளையும் போற்ற வேண்டும்.

உலக நாடுகள் எல்லாம் வியந்து கவனிக்கும் அளவிற்கு இந்நிய ஜனநாயகம் வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஜி 20 மாநாட்டிற்கு தலைமை ஏற்று உலக நாடுகளை வழி நடத்தும் பெருமையை இன்று இந்தியா பெற்றிருக்கிறது. அதன் முதல்நிலை மாநாடு புதுச்சேரியில் நடைபெற இருக்கிறது. இது நம் அனைவரும் பெருமைபடத்தகுந்த தருணம். நமது பாரம்பரியம், கலை. கலாச்சாரம். திறமை அனைத்தையும் உலக அளவில் பறைசாற்ற கிடைத்திருக்கும் மிகப்பெரிய வாய்ப்யு.

பாரதப் பிரதமரின் வழிகாட்டுதலில் மத்தய அரசின் ஒத்துழைப்போடு சிறந்த மாநிலமாக புதுச்சேரி மாநிலம் வளர்ச்சி பெற்று வருகிறது. ஒத்துழைப்பு அளித்துவரும் மக்கள் அனைவருக்கும் இந்த தருணத்தில் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுச்சேரி மக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது உளம் கனிந்த குடியரசு தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.